## பொதுக்காலம் 7ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் ஏழாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு அன்பைப் பற்றி ஆழமாக எடுத்துரைக்கின்றார். அன்பைப் பற்றி அனைத்து மதங்களும் பேசினாலும், அவை அனைத்திலும் இல்லாத ஒன்று, நம் கிறிஸ்தவத்தில் மட்டுமே அடங்கியுள்ளது. அதுதான், "பகைவரையும் அன்பு செய்யுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக செபியுங்கள்" என்பதாகும். இதைத்தான் நம் இறைமகன் சிலுவை மரணத்தின்போது, "தந்தையே, இவர்களை மன்னியும்" எனக் கூறி அவர்களை மன்னித்தார். அவர்களுக்காக செபித்தார். அவர்தான் கிறிஸ்து. இதுவே கிறிஸ்தவம். கிறிஸ்தவத்தின் தனித்துவமும் கூட. நம்மை அன்பு செய்பவர்களையே நாம் அன்பு செய்தால் அதிலெந்த சிறப்புமில்லை. பகைவர்களை பழிவாங்க இருக்கின்ற துணிவு, அவர்களை மன்னித்து, ஏற்று, நேசிக்க முற்படுகின்றபோது அதற்கான பரந்த மனம் இல்லாமல் போகின்றது. அதைச் செய்வதற்கே நமக்குத் துணிவு தேவை. பரந்த மனம் தேவை. அதிலேதான் நம் கிறிஸ்தவத்தின் சாரம் இருக்கின்றது.

"பகைவரிடமும் அன்பு கூருங்கள்" என இயேசு போதிக்கின்றார் என்றால், நமக்கு பகைவர்கள் இருக்க வேண்டுமென்பதல்ல. மாறாக, பகைவர்கள் இல்லாத அளவிற்கு பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார். நம் அன்பு ஒளியைப் போலவும், மழையைப் போலவும் இருக்க அழைப்பு விடுக்கின்றார். விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நாமும் நிறைவுள்ளவராக இருக்கச் சொல்கின்றார். அனைவரையும் சமமாகப் பார்ப்பதே அன்பின் புதிய பரிமாணம். இயேசு கூறுகின்ற அனைத்தையும் சட்டமாகப் பார்த்தால் அது சுமை. அன்பு என்று பார்த்தால் அதுவே சுகம். நம் வாழ்வில் இறைவனையும், நம் உறவுகளையும் "கட்டளையாகப்" பார்த்தால் சுமைகளாகத்தான் தெரிவார்கள். அவர்களை நாம் அன்பு என்ற கண்ணாடியில் வைத்துப் பார்த்தால் அவர்கள் சுகங்களே. நம் பகைவருக்கும் அன்பு காட்டி நாம் இயேசுவின் சீடர்கள் என்ற நற்சாட்சிகளாய் வாழ்ந்திட அருள் வேண்டி, இணைவோம் இத்தெய்வீகத் திருப்பலியில்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. இரக்கமும் அருளும் நிறைந்த இறைவா,

திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் நீர் அவர்களுக்கு கொடுத்துள்ள உடல், உம்முடைய கோயில் என்றும், தூய ஆவியார் அதில் குடியிருக்கின்றார் என்பதையும் ஆழமாக உணர்ந்து ஏற்றுக் கொண்டவர்களாய், இறையன்பும், பிறரன்பும், தாழ்மையும், தூய்மையும் கொண்டவர்களாய் பணியாற்றிட வேண்டிய ஆழமான உணர்வினை அவர்களுக்கு அளித்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் திருவுருவே இறைவா,

உம் பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் பகைவர்களை மன்னித்து, ஏற்று, அன்பு கூரவும், எங்களைத் துன்புறுத்துவோருக்காக வேண்டவும், பகைவர்கள் இல்லாதவாறு எங்கள் வாழ்க்கை அமையவும், யாரிடமும் எந்த பாகுபாடும் பார்க்காமல் அனைவரையும் சமமாக நேசிக்கும் மனதினை, பணிவினைப் பெற்றிடவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவரான தந்தையே இறைவா,

எம் சிறுவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் இறையுறவிலும், ஒழுக்கத்திலும். ஞானத்திலும் சிறந்து வளர்ந்திடவும், மேலும், அரசு பொதுத் தேர்வுக்காக தங்களை ஆயத்தப்படுத்தும் உள்ளங்களை உம் ஞானத்தால் நிரப்பிடவும், அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெறவும், தங்கள் வாழ்க்கையில் சரியான பாதையினை தேர்ந்தெடுத்து நல்வழியில் சென்றிடவும், “நீர் விண்ணரசு இவர்களதே” என்ற உம் வார்த்தையை நன்கு உணர்ந்து, உம் இறையரசை இம்மண்ணிலே மலரச் செய்திடக் கூடிய வல்லமையை, ஆற்றலை அவர்களுக்கு நிறைவாகத் தந்தருளவும் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வளமான வாழ்வைத் தருகின்ற இறைவா,

இந்நாள் வரையில் நீர் எங்களுக்குச் செய்து வருகின்ற அனைத்து நன்மைகளையும் நன்றியோடு நினைவு கூர்கின்றோம். எங்களையும். எங்கள் பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மென்மேலும் நிறைவாக ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்றும், எங்கள் தொழில் முயற்சிகளை ஆசீர்வதித்து, எங்கள் உழைப்புக்கேற்ற பலனை நாங்கள் பெற்றிடவும், எங்களுக்குப் போதுமான நல்ல வான்மழையைத் தந்து எங்கள் வாழ்வு வளம் பெறச் செய்திடவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அருள் வளங்களின் ஊற்றே இறைவா,

குடும்பங்களாக வாழ அழைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் எங்களை அணிசெய்து, ஒருவரையொருவர் பொறுத்துக் கொண்டு, ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் நீர் எங்களை மன்னித்ததுபோல, நாங்களும் மன்னித்து வாழவும், நற்செயல்கள் செய்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும், உமக்குரிய தூய குடும்பங்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com